முரசொலி
வார இதழ்
ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 20—9—57 | வெள்ளி | ஒலி 22

திருவண்ணாமலை தீபம்

அன்புள்ள பொன்முடி!

மலைமலையாகக் கற்பூரம்—குடம் குடமாக நெய்—திரள் திரளாக மக்கள்—முகில் தழுவும் மலைமீது தீபஜோதி—எங்கு நோக்கினும் ஆடவர் பெண்டிர் "அரோகரா!"—ஒரே பக்திப் பிரவாகம்!

சிவனாரின் அடியையும் முடியையும் காண்பதற்கு முயன்ற அரியும் அயனும் தோற்றுப் போன ஐதீகத்தைக்கொண்ட அரிய க்ஷேத்திரம்!

முடியைக் காண்பேன்—நானே விஷ்ணுவைவிடப் பெரியவன் எனும் பெருமை பெறுவேன் எனச் சபதமேற்றப் பிரமனும், அடியைக் காண்பேன்—பிரமனைவிடப் பெரியவன் நான் என்பதை நிலை நாட்டுவேன் என உறுதிபூண்ட விஷ்ணுவும் அன்னமாகவும் வராகமாகவும் உருமாறி, ஆகாயத்தை நோக்கிப் பறந்தும், பூமியை நோக்கிக் குடைந்தும், தங்கள் ஆராய்ச்சியை மேற்கொண்டபோது சிவனின் தலையிலிருந்து கீழே விழுந்த தாழம்பூவை வழியிலே சந்தித்து முடிகண்டதாகப் பொய் சொல்லி பிரமன் மூக்குடைபட்டான் என்றும் புராணமுண்டு திருவண்ணாமலைக்கு!

பிரமனுக்குப் பொய் சாட்சி சொன்ன தாழம்பூவும் சிவனாரின் சாபத்துக்கு ஆளாகி விட்டது. பாபம்! முடிவில் பிரமா விஷ்ணு இருவருமே பெரியவரில்லை; சிவனார்தான் பெரியவர் என்ற முடிந்த முடிவையும் கட்டிவிடுகிறது திருவண்ணாமலை புராணம்!

அந்தத் திருத் தலத்திற்கு பழைய மகிமை போதாதென்று இருப்பதை அதிகமாக்கும் நோக்குடன் ரமண மெருகும் பூசப்பட்டிருக்கிறது.

அந்தப் பக்தி கமழும் திருவண்ணாமலையிலேதான நண்பா, அருணாசலம் இருக்கிறார்; ஆண்டவனாக!

ரமணர் இருக்கிறார் மகானாக!

நமது சண்முகம் இருக்கிறார் எம். எல். ஏ. வாக!

அங்கே மலையுண்டு—மலைமீது தீபமுண்டு! மடமுண்டு—அதற்கு மகிமை கூறும் மக்களுண்டு! 'நாமுண்டு நம் வீடுண்டு' எனக் கிடந்தோரைத் தட்டி யெழுப்பி 'நமக்கோர் நாடுண்டு; அதை ஆளும் உரிமை நமக்கே உண்டு' என்ற எழுச்சிப் பண்பாடிடும் எழில் நிறை இளைஞர் அணிவகுப்பும் ஏராளமுண்டு!

திருவண்ணாமலை என்றதும் உனக்குத் தீப உற்சவமும்—மகான் ரமணருக்குப் புற்றுநோய் கண்டு அவர் மோட்சப் பயணம் மேற்கொண்ட நிகழ்ச்சியும் மட்டுமா நினைவுக்கு வருகிறது? ஏனப்பா உன் கண்களில் கலக்கம்! புரிகிறது எனக்கு! என்னருமைத் தோழனே; மலைமீது கொழுந்து விட்டெரியும் நெருப்பை விடக் கொடிய நெருப்பை நம் நெஞ்சிலே மூட்டி விட்ட "அரசியல் க்ஷேத்திர" மன்றோ திருவண்ணாமலை!

தொலை தூரத்திலுள்ள நம்மையும் ஆச்சாரியாரையும் தொடர்புபடுத்திப்பேசுவதிலே தனி இன்பங் கொண்டு திரியும் திருக் கூட்டத்தின் தலைவராம் பெரியார் ராமசாமியிடமிருந்து நாமெல்லாம் வெளியேறுவதற்குக் கால்கோல் விழா—துவஜா ரோகணம்—காப்பு கட்டி உற்சவம்—நடைபெற்ற இடமன்றோ அது!

பெரும் பதவியிலேயிருந்த ஆச்சாரியார் டெல்லியிலேயிருந்து திருவண்ணாமலை குகைக்கு வந்தார். குகையின் வாசலிலேயே சிங்கத்தைச் சந்தித்தார். வென்றார். குகைக்குள்ளே சென்று குள்ளநரி மொழியிலே சொன்னார்; "இனி சிங்கத்தைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை—சிங்கமே வழிக்கு வந்து விட்டது!" என்று!

அரியும் அயனும் மட்டுமல்ல; நமது அரிமாவும் பணிந்த இடமன்றோ அண்ணாமலை!

நாம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த தலம்! நமது வரலாற்றின் சுவடியிலே ஒரு சோகக் கட்டம்!

வட ஆற்காடு மாவட்டம் நமது இயக்கத்திற்குப் பெருமை தேடித் தந்ததில் எந்த மாவட்டத்திற்கும் பின் வாங்கியதில்லை.

ஆனால் அதே சமயம் "திருவண்ணாமலை" ஏற்பட்டதையும், "வேலூர்" நம் குடும்ப ஒற்றுமையில் வேல் போல் நுழைந்ததையும் யாரோ அதற்குள் மறந்து விட முடியும்! அண்ணாமலை புராணத்தை நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஒரு அரசியல் சம்பவமும் நெஞ்சில் அலைமோதுவதுண்டு பொன்முடி!

யார் பெரியவர்? நானா, நீயா—என்று நாராயணனும் நான்முகனும் போட்டியிற் குதித்தது போலவே, நமது முதலமைச்சராயிருக்கும் காமராசரும், ஆச்சாரியாரும் போட்டியில் குதித்து—"நீங்கள் யாரும் பெரியவரில்லை; நானே பெரியவன்" என்று நேரு பகவானிடமிருந்து தீர்ப்புபெற்ற சம்பவத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

பிரமனே பெரியவன் எனச் சாட்சி கூறிப் பரமசிவனின் சாபத்துக்கு ஆளான தாழம்பூவின் கதைதான்—காங்கிரசிலேயிருந்து வெளியேற்றப் பட்டவர்களைப் பார்க்கும் போது நினைவுக்கு வருகிறது.

ஆத்திகருக்கு மட்டுமின்றி அரசியல்வாதிகளுக்கும் திருப்புமுனைத் தலமாகிவிட்ட திருவண்ணாமலையில் கார்த்திகைத் திங்களில் பக்தர்கள், கூடுவார்கள். ஓத்தக் கூட்டைவிட்டு மேல் வீட்டை அடைவதற்கு மார்க்கம் காணப் போகிறேன் எனக் கூறிடுவோரும்—மாடி வீட்டை இடித்து மாளிகையாக மாற்ற வேண்டும்; அதற்கு ஆண்டவன் அருள்பெறப் போகிறேன் என மொழிந்திடுவோரும்—ஆண்டு ஆறு ஆகிறது அவள் கழுத்திலே தாலி கட்டி; இதுவரை, ஒரு குஞ்சு குளுவான், புழு பூச்சி அவள் வயிற்றிலே வைக்கவில்லை; அதற்குப் பிரார்த்தனை செய்து கொள்ளப்போகிறேன் எனப் பேசிடுவோரும்—தேர்தலிலே வெற்றி பெறு விட்

4-ம் பக்கம் பார்க்க

சென்ற வாரத் தொடர்ச்சி

3

பிள்ளைக்கனிய முதை, பேசும் பொற் சித்திரத்தை மீண்டும் உயிருடன் பெற்று விட்ட மகிழ்ச்சியோடு அந்த இந்துப் பெண், உடலும் உயிரும் சிலிர்க்க வீட்டை நோக்கி விரைந்து ஓடினாள். குழந்தையோ, மரணத்தின் கோரப் பிடியிலிருந்து தப்பி விட்ட மகிழ்ச்சியாலோ என்னவோ, கொவ்வை உதடுகள் மலர பொக்கை வாய் திறந்து சிரித்துக் கொண்டிருந்தது. அவள் ஓடும் வேகத்தில் குழந்தைக்கு மூச்சுகூடத் திணற ஆரம்பித்தது. ஆகவே சற்று தூரத்திற்கு ஒரு முறை நின்று குழந்தையை ஆசுவாசப்படுத்தினாள்; அவளும் களைப்பாறிக் கொண்டாள்.

வானத்தை அண்ணாந்து பார்த்தாள்; சூரியன் மெதுவாக ஏறிக்கொண்டிருந்தான். இளம் வெய்யில் 'சுள்'ளென்று உரைக்க ஆரம்பித்தது. வீட்டில் வியாதியால் படுத்திருக்கும் கணவனின் நினைவு அவளுக்கு வந்தது. ஆமாம்; அவர் இந்நேரம், என்ன செய்து கொண்டிருக்கிறாரோ? வீட்டில் துணைக்குக்கூட யாரும் இல்லை. அவர் காலையில் எழுந்திருக்குமுன் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற எண்ணத்தில்தான், அதிகாலையிலேயே கடலாடச் சென்றாள். சென்ற இடத்தில் இப்படி ஒரு விபரீதச் சம்பவம் நடக்குமென்று அவள் எதிர் பார்க்கவே இல்லை. நல்ல காலம்; ஓநாயின் வாயிலிருந்து குழந்தை தப்பிப் பிழைத்தது. அந்த முகம்மதிய வீரன் மட்டும் இல்லாதிருந்திருந்தால்? அவள் குழந்தையின் கதி என்னவாகி இருக்கும்? ஓநாயின் கோரப் பற்கள் அந்தப் பச்சிளம் குழந்தையின் மாமிசத்தைச் சுவை பார்த்திருக்கும்! — அந்தப் பயங்கர மரண காட்சியை ஒரு கணம் எண்ணிப் பார்த்தாள்; அவளுடைய நெஞ்சம் துணுக்குற்றது. இந்த உணர்ச்சி சற்று நேரம் தான் இருந்தது. மறுகணமே அந்த முகம்மதிய வீரனின் முகம் அவளுடைய நினைவுக்கு வந்தது. குழந்தையின் மரணத்தைவிட அவனுடைய தோற்றம் அவளுக்கு அதிகப் பயங்கரமாகத் தோன்றியது.

குழந்தை பிழைத்துவிட்டது என்னவோ உண்மை. ஆனால் அது யாரால் பிழைத்தது? ஒரு முகம்மதியனால்! முகம்மதியனின் கருணையால்—சிலை உடைப்பவன் ஒருவனின் அன்புள்ளத்தால்—உயிர் தப்பிய குழந்தைக்கு சோமநாதரின் ஆசீர்வாதம் எப்படிக் கிட்டும்? ஆசீர்வாதம் கிடைக்காவிட்டாலும் சாபமாவது ஏற்படாமல் இருக்கவேண்டுமே! இம்மாதிரியான போராட்டங்கள் நெஞ்சத்தைத் துளைக்க, குழந்தை தப்பிய மகிழ்ச்சி ஒரு புறத்தில் நிழலாட, நோய்வாய்ப்பட்ட கணவன் வருகைக்காகக் காத்திருப்பாரே என்ற அச்சம் உந்தித் தள்ள, அவள் வீட்டை நோக்கி வேகமாக நடைபோட்டுக் கொண்டிருந்தாள்.

அவள் வீட்டை அடைந்தபொழுது கணவன் விழித்துக் கொண்டு விட்டான். இருமி இருமி ஈளை கட்டிய அவன் தொண்டை வரண்டுபோய்ப் படுத்திருந்தான். அவனுக்கு வயதொன்றும் அதிகமாகிவிடவில்லை. இளமையின் இன்பங்களை அனுபவிக்க வேண்டிய வயதில் பொல்லாத க்ஷயம் அவனைப்பிடித்துக்கொண்டது. அவனுடைய உடல் நாளொரு கோலமும் பொழுதொரு நிலையுமாக இளைத்தது. வாழ்க்கை அவனுக்குப் பாலையாயிற்று; அதில் வளர்ந்து மலரவேண்டிய மனைவியும் வாட ஆரம்பித்தாள்.

அவள் ஒரு இந்து மனைவி! கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற பரம்பரைத் தத்துவத்தில் ஊறி வந்தவள். பதிக்கு வாழ்வில்லையானால் பத்தினிக்கும் வாழ்வில்லை என்பதை உணர்ந்தவள்.

மலைமாதிரி இருந்த கணவன், தேய் பிறை நிலவாகி வருவதைப் பார்த்து, குடும்ப வாழ்க்கையில் அமாவாசை தோன்றி விடக்கூடாதே என்ற அச்சத்தில், நாள்தோறும் சோமேஸ்வரர் ஆலயத்தில் விளக்குப் போட்டாள். ஆலயத்தில் தீபமிட்டாலாவது குடும்பத் தீபம் ஒளி பெறாதா என்ற ஆசை அவளுக்கு! ஆலயத் தீபம் வளர்ந்தது. ஆனால் இல்லற விளக்கோ, ஒளி குன்றி அணைந்து புகையும் நிலையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தது.

பூட்டிய கதவைத் திறந்தாள்.

"புவனேஸ்வரி...!"

ஆவலோடு காத்திருந்தவன் காலரவத்தைக் கேட்டவுடன், மனைவிதான் வந்திருக்க வேண்டும் என்ற யூகத்தில் பெயர் சொல்லி அழைத்தான்.

"இதோ வந்துவிட்டேன்," என்று சொல்லிக்கொண்டே குழந்தையைத் தொட்டிலில் கிடத்திவிட்டுக் கணவன் அருகில் ஓடினாள்.

"இவ்வளவு நேரம் எங்கு போயிருந்தாய் புவனா?"

"ஏன்? கடற்கரைக்கு குளிக்கத்தான் போயிருந்தேன்..."

"குளிப்பதற்கா இவ்வளவு நேரம்? என்ன பெண் நீ! நாக்கு வரண்டு விட்டது. தண்ணீர் கொடுக்கக்கூட ஆள் இல்லை..."

அவன் 'லொக் லொக்' என இரும ஆரம்பித்தான். சுரக்கும் கண்ணீரை முந்தானைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள். குவளையில் இருந்த நீரை அவனுக்குக் கொடுத்தாள். அவனும் 'மொடக் மொடக்' கென்று இரண்டு வாய் நீர் குடித்தான்.

"என்றைக்குமில்லாமல் ஏன் புவனா இன்று இவ்வளவு நேரம்?" — அவனும் விடுவதாயில்லை. அவளுக்கோ என்ன பதில் சொல்லுவதென்றே புரியவில்லை. குழந்தையை ஓநாய் தூக்கிப் போன கதையைச் சொன்னால், அவளுடைய அஜாக்கிரதைக்காக அவன் அவளைக் கடிந்து கொள்ளக் கூடும். பின் குழந்தை எப்படிக் காப்பாற்றப்பட்டது என்ற கேள்வி பிறக்கும். முகம்மதியன் ஒருவன் குழந்தையைக் காப்பாற்றிய விவரங்களைச் சொன்னால், அவர் என்ன நினைப்பாரோ, ஏது சொல்வாரோ என்ற அச்சம் அவளை வாட்டியது. ஆனால் உண்மையைச் சொல்லாமல், அவள் எப்படி பொய் சொல்லத் துணிவாள்? வாழ்க்கையில் இது வரை விளையாட்டுக்காகக்கூடக் கணவனிடம் பொய் சொல்லி அறியாதவள்; இப்பொழுது விடாப்பிடியாகக் கணவன் விஷயத்தைக் கேட்கின்றபொழுது அவள் எப்படி மறைப்பாள்? மெதுவாகத் தயங்கி ஒருவாறு அவனிடம் உண்மையைச் சொன்னாள்.

முகம்மதியன் ஒருவனால் குழந்தை காப்பாற்றப்பட்டது என்பதைக் கேட்டவுடனேயே நெருப்புச் சுட்டதுபோல் துடித்தான். "மகாப் பாபம்; மகாப் பாபம்," என்று அவனது வாய் முணுமுணுக்கத் தொடங்கியது.

"அடிப் பாவி; அந்தப் பாதகனால் குழந்தை உயிர் பிழைத்ததைவிட ஓநாயினால் மாண்டு போயிருந்தாலும்கூட சோமநாதரின் அருளுக்குப் பாத்திரமாகியிருக்கும். தீண்டப்படாதவன்—பார்க்கப்படாதவன்—சண்டாளன்—நம் மதத்தின் பயங்கர விரோதி—நீசன் ஒருவனா என் குழந்தையைக் காப்பாற்றினான்? மத அனுஷ்டானங்களை நன்றாக உணர்ந்த நீதான் அதை எப்

❋ 6-ம் பக்கம் பார்க்க

திராவிடநாடு விடுதலை வாரம்

செப்டம்பர் 17-ம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 9-வது ஆண்டு துவக்க நாளான 17—9—1957-ஆம் நாளிலிருந்து 23-ஆம் நாள்வரை திராவிட நாடு விடுதலை வாரமாகக் கொண்டாடும்படி ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளையும் கழகச் சார்புள்ள அமைப்புகளையும் அன்போடு விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள், இலவச இசை—நாடக அரங்குகள் ஆகியவற்றைச் சிறப்போடும் பொலிவோடும் நடத்தி நாட்டுப் பிரிவினைக்கான கருத்து விளக்கம் தருவதுடன், கழகப் போராட்டங்களில் உயிர்நீத்த தோழர்களுக்கு வீர வணக்கமும் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்.

அன்பன்
இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர், தி. மு. க.

வெள்ளி 20—9—57 சென்னை

வெற்றி நமதே!

செப்டம்பர் 17-கழகம் பிறந்த நாள்; வழிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தந்தையாரை விட்டுப் பிரிந்த நாள்!

—அதே நாளில்தான் வர இருக்கும் நாட்களில் வலிவும் பொலிவும் பெற நாம் திராவிட நாட்டுப் பிரிவினை வாரம் கொண்டாடுகிறோம்!

பொங்கு கடலும்; புகழ் தங்கும் வரலாறும்; எங்கு தோண்டினும் கனிப்பொருளும்; மங்காத நிலவளமும்; பிற நாட்டை எண்ணி ஏங்காத நீர் வளமும்; நெஞ்சத்து நினைவிலும்; மஞ்சத்துக் கனவிலும் என்றும் தங்கியிருக்கும் எழில் மணம் சேர் அகிலும் நிறைந்த காட்டு வளமும் கொண்ட காசினிக்கோர் திலகம் திராவிடம்!

இங்கே நாட்டோரை அடிக்கடிக் கவலையின் எல்லைக் கோட்டிலே நிறுத்திவைக்கும் எரிமலை கிடையாது; ஆனால் நினைத்தால் அழிவு சக்தியில் எரிமலையையும் மிஞ்சக்கூடிய விரிந்த மலைத் தோள்கள் கொண்ட திறல் மறவர் பலருண்டு!

இங்கே வளமுண்டு! ஆனால் அந்த வளத்தைப் பயன்படுத்திடும் வகைதான் இல்லை!

இங்கே திரட்டப்படும் வரிப் பணத்தைக் குவித்து வைத்தால் மலை உயரம் வரும்; ஆனால் அந்தத் திரண்ட திரவியத்தை நாமே அனுபவித்திடும் நிலைதான் இல்லை!

உயிர்க் கலைகள் நிரம்பவுண்டு; ஆனால் தேசியத் தொன்மை கூறும் 'தலை'தான் அதற்கு இல்லை!

இவைகளையெல்லாம் திரும்பவும் மாற்றியமைத்துப் பழைய நிலையிலே—வாழ்ந்து கெட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி நிறுத்துவதற்கு உதித்துவிட்ட இளம் பரிதிதான் திராவிட முன்னேற்றக் கழகம்!

திராவிட நாடு திராவிடருக்கே—இந்த இலட்சிய முழக்கம் பாய்ந்திட்ட செவிகள் சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகம் என்ற அளவிலே கொள்கை பரவிவருகிறது!

—ஆனால் அதே நேரம் திராவிடம் என்ற வார்த்தையே இலக்கியத்தில் கிடையாதே என்று வெறும்வாய்க்காரர்கள் முழக்கமிடுவதையும் கேட்கிறோம்!

ஒரு நாட்டுக்குப் பெயர் வைக்க வேண்டுமானால் நிச்சயம் அந்தப் பெயர் பழைய இலக்கியத்தில் இருந்துதான் தீரவேண்டும்—என்ற தவறான கருத்தினால் தூண்டிவிடப் படுகிறவர்கள், அவர்கள்!

பாரதம் என்று அழைக்கப்படுகிற இந்தியா இரண்டாகப் பிளவு பட்டதல்லவா?

அந்தப் பிரிந்துபோன பூகோளத் துண்டின் பெயர் என்ன?

பாகிஸ்தான்!

அந்தப் பாகிஸ்தானிலே பெரும்பான்மையாய்ப் பேசப்படும் மொழி என்ன?

உருது!

ஆனால் 'பாகிஸ்தான்' என்னும் இந்த வார்த்தை பழங் கால உருதுமொழி இலக்கியத்தில் இருக்கிறதா?

இல்லை.

சரி; அதுதான் போகட்டும். 'பாகிஸ்தான்' என்ற இந்த வார்த்தையாவது, தூய்மையான உருதுமொழியில் உண்டா?

அதுவுமில்லை.

பர்சிய மொழியும் உருதுமொழியும் இணைந்து உருவான பதம் 'பாகிஸ்தான்' என்பது!

—அதாவது, ஆசியாவிலே முஸ்லிம் பெருங்குடி மக்கள் வாழும் அத்தனைத் தாயக நாடுகளின் பெயர்களுடைய முதல் எழுத்துக்களினால் உருவான பெயர்தான் அது!

பாகிஸ்தான் என்பதிலே உள்ள P என்பது பஞ்சாபைக் குறிக்கும்!

A என்பது வடமேற்கு எல்லைப்புற மாநிலம் என்று அழைக்கப்படுகிற ஆப்கானியாவைக் குறிக்கும்!

K என்பது காஷ்மீரைக் குறிக்கும்!

I என்பது ஈரானைக் குறிக்கும்!

S என்பது கட்ச், கத்தியவார் அடங்கிய சிந்துவைக் குறிக்கும்!

T என்பது துகாரிஸ்தானைக் குறிக்கும்!

A என்பது ஆப்கானிஸ்தானத்தைக் குறிக்கும்!

N—பலுசிஸ்தான் என்பதிலுள்ள கடைசி எழுத்தைக் குறிக்கும்!

—ஆக ஆசியாவிலுள்ள அத்தனை முஸ்லிம் தாயகங்களின் பெயரையும் உள்ளடக்கி இந்த இருபதாம் நூற்றாண்டில் இணைக்கப்பட்ட சொல்தான் பாகிஸ்தான்—அதாவது தூய்மையான—பரிசுத்தமான மதவாதிகளின் நாடு என்பது இதற்குப் பொருள்!

பாகிஸ்தான் பெயர் சூட்டும் பிராயத்தில் அங்கே யாரும் முழுக்க முழுக்க உருது அல்லாத புதிய சொல்லைக் கொண்டு நாட்டை அழைக்கலாமா—என்ற பூசல் கிளம்பவில்லை; பேதம் கற்பிக்கவில்லை!

பாகிஸ்தான்—இன்று ஆட்சி நடத்தத் தெரியாதவர்கள் கையிலே அகப்பட்டுக் கொண்டு தத்தளிக்கலாம்—ஆனால் அந்த நாடு அமைந்த வரலாற்றை யாரும் மறைத்துப் பயனில்லை!

பாகிஸ்தான்—பாரதம் எப்படியும் பிளவுபட்டே தீரவேண்டும் என்பதைக் காட்டும் அறிவிப்பு விளக்கு; ஆனால் அதே நேரம் ஒரு நாட்டு விடுதலை ஏகாதிபத்தியதாசர்களின் கையிலே சிக்கினால் அந்த நாடு எப்படிச் சீரழியும் என்பதைக் காட்டும் அபாய விளக்கும் கூட!

—ஆகவே அதே பிரிவினைத் திட்டத்தின் அடிப்படையில் செல்லும் திராவிடர் இயக்கம் எந்த நாளும் தோற்றுவிடுமென்னும் ஐயப்பாடு எழுவதற்கே காரணமில்லை!

—இந்த உறுதியும்; தன்னம்பிக்கையும் உள்ளத்தில் அரும்புகிற இதே காலை, "இவ்வளவு பேசுகிறீர்களே; உங்களால் பதினைந்தே பேரைத்தானே சட்ட மன்றத்திற்குக் கொண்டுவர முடிந்தது!" என்ற முனகலையும் கேட்கின்றோம்!

பதினைந்து பேர்—இதர நாட்டு விடுதலை இயக்கங்கள்; முற்போக்குக் கட்சிகள் தங்கள் வளர்ச்சிப் பருவத்தின் ஆரம்பத்தில் பெற்ற இடங்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல!

சென்ற 1937-ம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற தேர்தலின் போது மொத்த மக்கட் தொகையான 295 மில்லியனில் 30 மில்லியன் பேர் ஓட்டுரிமை பெற்றிருந்தனர்.

இந்த 30 மில்லியன் பேரில் 30 சத வீதத்தினர் முஸ்லிம்கள்!

—ஆனால் இந்த முப்பது சதவித ஓட்டுகளும் முஸ்லிம் லீக் நிறுத்திவைத்த அபேட்சகர்களுக்கே கிடைத்தது என்று நினைக்கிறீர்களா?

இல்லவே இல்லை; ஐந்தே சதவித முஸ்லிம்கள்தான் அவர்களுக்காக அல்லும் பகலும் அனவரதமும் பாடுபட்டு வரும் முஸ்லிம் லீகுக்கு ஓட்டளித்தார்கள்!

முஸ்லிம் பெரும்பான்மையினரிடத்திலெல்லாம் நல்ல முறையில் வலுப்பெற்றிருந்தும் 1946-ல் தேர்தலில்கூட முஸ்லிம் லீக்கினால் முழுக்க முழுக்க முஸ்லிம் மாநிலமான வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தில் போதிய செல்வாக்கு பெறமுடியவில்லை!

அதனால்தான் அந்த நேரம் பண்டித நேரு 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் மிகமிக அலட்சியமாக — "ஏதோ இந்தியாவைப் பிரிக்க வேண்டுமென்று முஸ்லிம்களிடையே ஒரு பிரச்னை இருக்கிறது. ஆனால் அதைச் சிலர்தான் ஆதரிக்கிறார்கள்," என்று கூறினார்.

பிறகு அதன் நிலைமை என்ன? சிலர் பலரானார்கள்! ஏகபாரதத்தின் பிடரியைப் பிளந்தார்கள்!

இங்கே தி. மு. கழகம் போட்டியிட்ட முதல் தேர்தலில் 15 பேர்தான் வெற்றிபெற முடிந்தது!

அங்கே முஸ்லிம் லீக் கலந்துகொண்ட முதல் தேர்தலில் 5 சத வீத முஸ்லிம்கள்தான் ஓட்டளித்தார்கள்!

இங்கே திராவிட நாட்டுப் பிரிவினையை, நாம் யாருக்கும் சேர்த்து விடுதலை கேட்கிறோமோ அந்த ஆந்திரரும், கேரளத்தவரும், கன்னடியரும் ஆதரிக்கவில்லை!

அங்கே முஸ்லிம் லீக்கை-பாகிஸ்தான் பிரிவினையை அவர்கள் யாருக்காகவும் சேர்த்து நாடு கேட்டார்களோ அந்த வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தவர்கள் பல ஆண்டுகள் ஆதரிக்கவில்லை!

—இறுதியில் பாகிஸ்தான் பெறாமல் முஸ்லிம் லீக் அழிந்ததா?

—அந்தப் பாகிஸ்தானில் சேராமல் வடமேற்கு எல்லைப்புற மாநிலம் இருந்ததா?

இல்லை. அதைப்போலத்தான் இங்கும் பதினைந்தே பெற்ற நம்மால் மீதமிருக்கும் இடங்களையும் பெறமுடியும்! வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தைப் போலவே காலப்போக்கில் ஆந்திர கேரள கன்னட மாநிலங்களையும் சேர்த்துக்கொள்ள முடியும்!

—இந்த ஆண்டுத் திராவிட நாட்டுப் பிரிவினை வாரத்தில், அருமைத் தோழர்களே! சரித்திரம் காட்டும் இந்தப் படிப்பினையை எண்ணிப் பாருங்கள்! எதிர் காலம் நம்மிடம் இருக்கிறது என்ற உறுதியோடு மேற்கொண்டு பணியாற்றுங்கள்—வெற்றி நமதே!

பாண்டியனில்லை மன்னனாக-அவன்

✲ முதல் பக்கத் தொடர்ச்சி

டாலும் 'டெபாசிட்' வந்தால் போதுமென வேண்டிக்கொண்டேன்; நல்லவேளை; அதாவது கிடைக்க ஆண்டவன் வழி செய்தார்—எனவே வேண்டுதலை செலுத்தப் போகிறேன் எனச் சொல்லிடுவோரும்—"சாமீ கடவுளே! கொலை செய்தது உண்மைதான்; எப்படியாவது கொலை கேசிலேயிருந்து காப்பாற்றிவிடு! உன் உண்டியலிலே தங்க நாணயமாய்க் கொட்டுகிறேன்" என வேண்டிக்கொண்டு ஆயுள் தண்டனை, தூக்குத் தண்டனையிலிருந்து தப்பிய பிறகு வக்கீல் பீசைக் கொடுக்காமல் தீப உற்சவத்துக்குக் காணிக்கையைச் செலுத்திட முந்துவோரும்—இப்படிப் பலரக பக்தர்கள் கார்த்திகையில் கூடுவர். இதோ, உனக்கும் எனக்கும் திருவண்ணாமலைக்கு அழைப்பு வந்திருக்கிறது; புரட்டாசியிலேயே!

தீபம் காண பக்தர்கள் கூடுவர். நாமோ ஒளி காணக் கூடுகிறோம்; ஒரு நகருக்கு அல்ல; ஒரு நாட்டுக்கே! ஒரு சமுதாயத்திற்கே!

மடம் காணச் செல்வர் பணம் காணும் செல்வர்! நாமோ படம காணச் செல்கிறோம்! தென்னகம் முந்திய நிலைப் படமும் — இன்றைய நிலைப் படமும்—எழுதவேண்டிய படத்திற்கான அமைப்பும் காணச் செல்கிறோம். விடுதலையெனில் — உடலைவிட்டு உயிர் பிரிவதை மட்டுமே பொருளாகக் கொண்டிருக்கும் பக்தசிரோன்மணிகள் கூடிக் கலையும் திருநகரில், விடுதலையெனில் அடிமைத் தனத்திலிருந்து மீட்சி—நமது தனி ஆட்சி—எதிரியின் கொடிக் கம்பத்தை அகற்றிவிட்டு நமது கொடிக் கம்பத்தை நிறுத்துவது—அந்த விடுதலைக்குத் தரப்படும் விலையோ சாதாரணமானதல்ல; சர்வபரித் தியாக உணர்வே அகற்றுச் சரியான விலை என்றெல்லாம் முழக்கமிடும் எண்ணற்ற தமிழ் மறவர் குழுமிடப் போகிறார்கள்.

அங்கே வருமாறு என்னையும் உன்னையும், எழுச்சிபெற்ற தமிழரையும், எல்லோரையும் அழைக்கிறார் முல்லை சத்தி!

அவர் வட ஆற்காடு மாவட்டத்தின் செயலாளர். நல் இளைஞர். இயக்கம் இடுகின்ற கட்டளைக்குத் தலை வணங்கி களமாயினும், வேறெந்தக் கடமையாயினும் சென்று வென்றிடும் செயல் திறத்தார். உரிமை காக்கும் போரிலே தண்டவாளத்தில் தலைவைத்துப் படுத்து, தாயகம் காக்க உயிர் தரவும் தயங்கேன் என மொழிந்து, ஆறு மாதக் கடுங்காவல் தண்டனையேற்ற அடலேறு! அவர் தான் அழைக்கிறார், திருவண்ணாமலை வாரீர் என்று!

விடுதலைத் தேருக்கோர் சாரதி—வேலூர் சாரதி! நகர மன்றத்திலும் சட்ட மன்றத்திலும் நற்பணியாற்றும் தோழர். இயக்கத்தின் முன்னணி வீரர், அவரே திருவண்ணாமலை மாநாட்டின் செயலாளர்.

மற்றொரு செயலாளர் சண்முகம்! ப. உ. ச. எனப் பற்றோடும் பாசத்தோடும் உச்சரிக்கப்படும் உறவுச் சொல். தமிழகமெங்கும் ஒலித்திடுகிறது. இருபத்தி ஐந்தாம் வயதிலேயே திருவண்ணாமலை நகராண்மைக் கழகத் தலைவராகப் பணிபுரிந்த ஆற்றல் மிகு இளைஞர், புன்னகையும் மென்மை மிகு உள்ளமும் கொண்டு எந் நேரமும் இயக்கம் இயக்கமெனவே இயங்குகின்ற தமிழர். அவரும் அழைக்கிறார்; அனைவரையும்!

நமது முடிந்த பொதுத் தேர்தலில் வட ஆற்காடு நமக்கு நாலு சட்டமன்ற உறுப்பினர்களையும், ஒரு மக்கள் மன்ற உறுப்பினரையும் வழங்கிப் பெருமைகொண்ட மாவட்டம்! அந்த மாவட்டத்தின் மாநாடு, திருவண்ணாமலையில் நடைபெறுகிறது.

அரசியல் மாநாட்டை அம்பில் தர்மலிங்கம் தலைமையேற்று நடத்துகிறார். தோழர் கிருட்டிணமூர்த்தி எம். ஏ. திறப்பாளர்.

அம்பிலைப்பற்றி உனக்கேன் அதிகம் எழுத வேண்டும்! உறங்கார் — ஊண் கொள்ளார்—உழைப்பினையே வாழ்வாய்க் கொண்டார்—அவர் தலைவர் மாநாட்டுக்கு!

தோழர் கிருட்டிணமூர்த்தி, முன்னாள் அமைச்சர்—அமைச்சராய் இருந்தபோதே அவரை எதிர்த்து நாற்பதாயிரம் வாக்குகள் பெற்று, இரண்டாயிரத்துக்குக் குறைவான வேறுபாட்டிலேயே வெற்றியின் வாய்ப்பை இழந்துவிட்ட மாணவச் சீயம். முன்னால் மந்திரியென்றால் யார்? ராமநாதபுரமா; பரமசிவமா— என்கிறாயா? இல்லை; இல்லை! உழைப்பாளர் கட்சியின் ஒரு பெருந் தலைவர் ராமசாமிப் படையாச்சியாரைத்தான் குறிப்பிடுகிறேன். அவரைத் திணற வைத்து, வெற்றி பெறுமிடினும் வித்தியாச வாக்குகளின் எண்ணிக்கையினைக் கொண்டு அமைச்சரது மங்கிவரும் செல்வாக்கைக் காமராசருக்கு உணர்த்தி, மந்திரிப் பதவியிலே மண்விழச் செய்த மாவீரர்! அவர் திறப்பாளர் மாநாட்டுக்கு!

முதல்நாள் இந்தி எதிர்ப்பு மாநாடு! பொன்முடி, திருவண்ணாமலைக்கு மீண்டும் அரசியல் முக்கியத்துவம் வரப்போகிறது என்பதற்கு இந்த மாநாடுகள் நல்ல அறிகுறிகள் என்பதை இப்போது நீ உணர்கிறாயா? இந்தியை எந்த வகையிலும் தமிழகத்தில் நுழைந்துவிட முடிவு செய்து முனைந்து விட்டார்கள் வெறியர்கள். அவர்கள் விலா தெறிக்க எதிர்ப்பு வளரவேண்டும் தமிழகத்தில்! மொழிகாக்கும் போர் மற்றொன்று மூள்வதற்கான சூழ்நிலைகள் உருவாகின்றன. இந்தி எதிர்ப்பு என்றதும் நம் மனக்கண் முன்னே பழைய நிகழ்ச்சிகள் படம்போல் தெரிகின்றன அல்லவா?

பெரியார், நாவலர் பாரதியார், அண்ணா, சாமி அருணகிரிநாதர், ஈழத்து அடிகள், பாண்டியனார், அழகிரி, விசுவநாதம் மறைமலை அடிகள்—இப்படி நல்லபெருந்தமிழரெல்லாம் அணி திரண்டனர், அந்நாள்!

தெருவெல்லாம் தமிழ் முழக்கம்!

சிறையெல்லாம் தமிழ் மக்கள்!

"ஓடிவந்த இந்திப்பெண்ணே, கேள் நீ—தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே" எனப் பரணிபாடிப் பைந்தமிழர் போர் வரிசை காட்டினர்.

ஆண்களும் பெண்களுமாக ஆயிரவர் அடக்குமுறைக்கு ஆளாகினர். இரண்டு தங்கங்கள் தாளமுத்து, நடராசன் சிறையிலேயே செத்து மடிந்தனர்.

படிக்கத் தெரியாதவர்; அதனால் செத்தனர்—என்று ஆணவம் பேசினார் ஆச்சாரியார்.

இந்தியை எதிர்ப்போர் தமிழ் நாட்டில் இருவரேதான்; ஒருவர் ஈ. வெ. ரா.; மற்றொருவர் பாரதியார்—என்றார் ஆச்சாரியார். எதிர்ப்போர் இருவர் என்பது உண்மையாயின் அதைக் கொண்டு வருபவர் நீர் ஒருவர்தானே எனப் பதிலுரைத்து சூளுரைத்துப் போர்க் களம் புகுந்தார் பன்னீர்ச் செல்வம்.

தமிழகமெங்கணும் அமளி. மாணவர் திரண்டனர் மாத் தமிழர் மனைதோறும் "தமிழ் வாழ்க!" என்ற போர்க் குரல்! "இந்தி ஒழிக", என்ற எக்காளம் கேட்காத இடமில்லை. அன்றெழுந்த குரலே, தாயகம் வடவர் ஆதிக்கத்திலிருந்து பிரிய 'வேண்டுமென்ற வலிவு மிக்கக் குரலாக இன்று வளர்ந்திருக்கிறது. பழைய போர்க் களம்—புதிய பல படைவீரர்க

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடு
திருவண்ணாமலை சாமி அரங்கில்
நடைபெறும்.

இந்தி எதிர்ப்பு மாநாடு

21-9-57 சனிக்கிழமை
காலை 8-30-க்கு காந்தி சிலை அருகிலிருந்து
தலைவர்கள் ஊர்வலம்

திறப்பாளர் :
சி. வி. எம். அண்ணாமலை

தலைவர் :
சுவாமி அருணகிரிநாதர்

சொற்பொழிவாளர்கள் :
டி. வி. நாராயணசாமி
க. அன்பழகன்
ஈ. வெ. கி. சம்பத்

இடைவேளை
— மாலை 3 மணி —

திரு. வில்லாளன்
,, சி. பி. சிற்றரசு
,, கண்ணதாசன்
,, மதியழகன்
,, டி. கே. தாமரைச்செல்வன்
நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி
மு. கருணாநிதி
நாவலர் நெடுஞ்செழியன்
அறிஞர் அண்ணா

இரவு 10 மணிக்கு
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்
"இன்பக் கனவு"
நாடகம்.

கட்டணம்: ரூ. 5. 3. 1, பெண்கள் அணா 8

பரம்பரை உண்டு தமிழகத்தில்!

ளுடன் — அனுபவமிக்கத் தளநாயகர்களின் தலைமையிலே மீண்டும் உருவாகிறது. அதை எடுத்துக் காட்டுவதே திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாடு!

சாமி அருணகிரி நாதர், முன்னாள் மொழிப் போரில் ஈடுபட்டுப் பணியாற்றிய பெருந் தமிழர். மறக்குடியின் மேன்மை காக்க அறப் போர்த் தலைமை தாங்கியவர். சாது! ஆனால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதை மெய்ப்பிக்கும் மாண்பு கொண்டவர். அவர் இந்த மாநாட்டுத் தலைமை வகிப்பது மிகப் பொருத்த முடையது!

மாநாட்டின் திறப்பாளர் காஞ்சிதந்த வீரர் அண்ணாமலை! திரு. அண்ணாமலை அல்ல! வெறும் அண்ணாமலை தான்; வசதிகள் வாய்ப்புகளில்!

அந்த வசதி வாய்ப்பு சிறிது கிடைத்திருந்தால் . போதும்; பக்தவத்சலனார் இப்போது மந்திரியாக பவனி வரவும்—நம்மை வசைபாடிக் காலங்கழிக்கும் ஆணவம் பெறவும் முடியாமற் போயிருக்கும்! அவ்வளவு கடும் உழைப்பாளி; காரியமாற்றும்,கடமை வீரர்; நமது காஞ்சி அண்ணாமலை! கடந்த இந்தி எதிர்ப்பின்போதும், கழகம் களம் அமைத்த நேரங்களிலும் அவர் முன்னேடும் பிள்ளையே தவிர; மூலையில் ஒதுங்கியவரல்ல.

அவர்தான் இந்தி எதிர்ப்பு மாநாட்டைத் திறந்து வைக்கிறார். பாசறையின் கதவுகளைத் திறந்து வைத்து "படையே; நடந்திடு பகையை வென்றிட!" என்றுரைக்கும் தளகர்த்தனைப் போல அண்ணாமலை கண்ணுக்குத் தெரிகிறார் நமக்கு!

பொன்முடி! இந்த மாநாடு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை காலம் காட்டத்தான் போகிறது மாநாட்டினைக் கேலி பேசுவோரும், இருட்டடிப்பு செய்வோரும், இழிமொழி கூறுவோரும், எமக்கென்ன வென்றிருப்போரும் திருவண்ணாமலை மாநாட்டை திராவிடத்தின் ஒரு வரலாற்று ஏடாகக் கொள்ளப் போகிறார்கள் வருங்காலத்தில் என்பதை எழுதாமலிருக்க முடியவில்லை.

போர் என்றால் முகஞ்சுளிப்போரும், சிறையென்றால் சிந்தை நொந்திடும் பேதைகளும் திருவண்ணாமலை மாநாட்டில் உலவிட மாட்டார்கள். தாயகம் மீட்கும் தானை—தமிழ் மொழி காக்கும் சேனை—அண்ணாவின் ஆணை. என்ன? பொதுச் செயலாளர் காட்டும் வழி யாது? மொழி காக்கத் தயார்! தயார்!! என முழங்கிடும் உணர்ச்சி மிகு காட்சியைத்தான் திருவண்ணாமலையில் காணப்போகிறோம்.

பழைய நாள் மன்னர்கள் பகைவன் படையெடுத்து வருவதை அறிவதற்குப் பல வழிகளைக் கையாண்டனர். தலைநகரிலிருந்து நாட்டு எல்லையிலே பல இடங்களில் முரசு, மண்டபங்கள் உண்டு எல்லையிலே உள்ள முரசு எதிரியைக் கண்டதும் தட்டப்படும். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு முரசாக அதிர்ந்து இறுதியில் தலைநகர் முரசும் ஒலிக்கும். மன்னன் போருக்குப் புறப்படுவான்.

இன்னொரு முறையு முண்டாம். தலை நகரிலிருந்து எல்லை வரையில் உள்ள குன்றுகளில் வீரர்கள் காவல் புரிவர். நாட்டு எல்லையில் பகைவன் நுழைந்து விட்டால், முதல் குன்றிலே உள்ளவன் குன்றின்மீது தீ மூட்டுவான். அந்தத் தீயைப் பார்த்து ,அடுத்தடுத்த குன்றுகளில் பெரும் தீ மூட்டப்படும். வரிசையாக எல்லாக் குன்றுகளிலும் ஒவ்வொன்றாகத் தீ மூட்டப்பட்டு இறுதியில் தலைநகருக்கு அருகேயுள்ள குன்றிலும் தீ கொளுத்தப்பட்டு அரசன் நிலையை உணர்ந்து பகையை எதிர்க்கப் படையுடன் கிளம்புவான்.

அந்தப் பழைய கால முறைமைதானோ என்னவோ; திருவண்ணாமலையில் புராணமொருகிட்டு ஆண்டு தோறும் கொண்டாடப்படுகிற திருவிழா!

அந்த விழா எப்படியிருப்பினும்—இதோ, வருகிற 21, 22 தேதிகளில் திருவண்ணாமலையில் ஏற்றப்படுகிற தீபம்—பகை வருகிறது நம்மை நோக்கி என எச்சரிக்கும் மலை விளக்கு என்பதை மறந்துவிடக் கூடாது நண்பனே!

தாயின் எழிலையும், ஏற்றத்தையும் காப்பாற்ற வேண்டிய கடமை நம்மை உந்தித் தள்ளுகிறது!

தாளமுத்து; நடராசன் கல்லறைகள் தமிழுணர்வோடு தியாக உணர்வையும் நமக்குக் கலந்து அளித்த வண்ணமிருக்கின்றன.

இடர்மிகு வழிகடந்து படைமிகுக்கொண்டு சென்று வடவேந்தர் முடியில் கல்தனை ஏற்றிவந்த சேரன் இருக்கிறான் நமக்கு வரலாறாக! அந்த வடநாட்டார் மொழியாம் இந்தி சேரனின் தாயைக்கொல்ல வருகின்ற கொடுமை என்னே? சேரனில்லையின்று! அவன் தம் பேரராம் நாம் இருக்கின்றோம்! பாண்டியனில்லை மன்னனாக—அந்தப் பரம்பரை யுண்டு தமிழகத்தில்! கரிகாலன் சந்ததி வீரமற்றுப் போய்விடவில்லை! உடலிலே வலுவும், உள்ளத்திலே தெளிவும் கொண்டு உரிமை முழக்கமிடத் துடித்த வண்ணமிருக்கிறது!

நமது உணர்ச்சியைத் துச்சமென மதித்து இந்தி வெறியர்கள். துவங்கி விட்டார்கள் துரோக வேலையை! அந்தோ பாவம்; அந்தகர்கள் தூங்கும் புலியை இடறுகிறார்கள்.

தமிழை எதிர்த்தவன் வாழ்ந்ததில்லை; தமிழைப் பழித்தவன் வென்றதில்லை எனும் பெரும் உண்மையைச் சிறு நரிகள் உணரும் காலம் விரைவில் வரத்தான் போகிறது.

அடக்குமுறைகளைக் கொண்டு தமிழ் உணர்வை அடக்கிவிட முயன்ற அப்பேற்பட்ட ஆச்சாரியாரே; இன்று இந்தி வேண்டாமென்கிறார். தமிழ் அந்த அளவு வெற்றிபெற்றிருக்கிறது -இன்று வெறிபிடித்தலைவோர் தமிழர் முன் எம்மாத்திரம்?

சிறைகள் சித்ரவதைக் கூடங்களாகட்டுமே — தெருக்களில் தமிழர் ரத்தம் பெருக்கெடுத்து ஓடட்டுமே—குழந்தை குட்டிகள் பெண்டுபிள்ளைகள் இந்தி வெறிக்குப் பலியாகட்டுமே—எதுவரினும் கவலையில்லை; ஏற்பதற்குச்சித்தமாகிவிட்டோம்! எங்கள் தாயைக் காப்பதற்கு எம்முயிர் கொடுக்கத் தயாராகி விட்டோம்—ஆறிலும் சாவுதான்; நூறிலும் சாவுதான்! ஆனது ஆகட்டுமேயென்று அறப்போரில் குதித்து விட்டோம் என்று ஆணவக்காரர்களுக்கு அறிவிக்கவே திருவண்ணாமலை நடைபெறுகிறது!

என்ன சொல்லப்போகிறது வடநாட்டு மொழி ஏகாதிபத்தியம்?

✻ 8-ம் பக்கம் பார்க்க

நகரசபை வரவேற்பு!
அறிஞர் அண்ணா
நாவலர் நெடுஞ்செழியன்
இருவருக்கும்
21-9-57 - மாலை 3 மணி அளவில்
திருவண்ணாமலை
நகரசபையில் வரவேற்பு அளிக்கப்படும்.

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடு
திருவண்ணாமலை சாமி அரங்கில்
நடைபெறும்.

3-வது அரசியல் மாநாடு

22-9-57 ஞாயிறு
காலை 8-30 மணி
நாகூர் அனீபா இன்னிசை
கொடியேற்றுதல்
திறப்பாளர் :
வெ. கிருட்டிணமூர்த்தி பி. ஏ. (ஹானர்ஸ்)
தலைவர் :
அன்பில் - தர்மலிங்கம்
சொற்பொழிவாளர்கள் :
சத்தியவாணி முத்து
ஆசைத்தம்பி
என. வி. நடராசன்
கருணாநிதி
இடைவேளை
— மாலை 3 மணி —
திரு. ஏ. கோவிந்தசாமி
,, என். எஸ். இளங்கோ
,, எஸ். எஸ். ராஜேந்திரன்
,, க. அன்பழகன்
,, நாஞ்சில் கி. மனோகரன்
,, ஈ. வெ. கி. சம்பத்
,, புரட்சி நடிகர் எம். ஜி ராமச்சந்திரன்
,, நாவலர் நெடுஞ்செழியன்
,, அறிஞர் அண்ணா
இரவு 10 மணிக்கு
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். நடிக்கும்
" அட்வகேட் - அமரன் "
நாடகம்

✻ 2-ம் பக்கத் தொடர்ச்சி

படி அனுமதித்தாய்? ஐயோ, பரம்பரையாக நாம் காப்பாற்றி வந்த ஆசாரத்தை—தர்மத்தை—சனாதன 'நெறியைப் பாழ்படுத்தி விட்டாயே, நான் என்ன செய்வேன்? ஹரே சோமேசா! இந்தப் பாபத்திற்கு ஏதாவது விமோசனம் உண்டா? நம் குடும்பத்தின் மீது நீங்காப் பாபமல்லவா சுமத்தப்பட்டது," என்று இடையிடையே இருமிக் கொண்டே, கூச்சலிட்டான் புவனேஸ்வரியின் கணவன்.

அவளுக்கோ என்ன செய்வதென்றே புரியவில்லை. இம்மாதிரி ஒரு நிலை ஏற்படும் என்பதை அவள் முற்றிலும் எதிர்பார்க்காமலுமில்லை. அவள் கண்களிலிருந்து 'பொல பொல' வென்று நீர் கொட்டியது.

"நான் உதவி கேட்காமலேயே அந்த முகம்மதியனே வலிந்து உதவி செய்தான்... அவன் குழந்தையைத் தொடக்கூட நான் அனுமதிக்கவில்லை," என்றாள் தேம்பிக்கொண்டே.

"மகாக் கர்மம், மகாக் கர்மம்." என்று அவன் தலையிலே போட்டுக் கொண்டான்.

தொட்டிலில் கிடந்த குழந்தை அழ ஆரம்பித்தது. "அழாதேடா ராஜா" என்று கூறிக் கொண்டே தொட்டிலை ஆட்டலானாள். அன்னையைப் பார்த்தவுடன் குழந்தை சிரிக்க ஆரம்பித்தது. அந்தச் சிரிப்பில் இந்து—முகம்மதியன் என்ற எந்த வேற்றுமையும் இல்லை!

புவனேஸ்வரியும் மகிழ்ச்சி பொங்க குழந்தையை வாரியெடுத்து மார்புறத் தழுவிக் கொண்டாள். முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு கணவனிடம் சென்றாள்.

"பார்த்தீர்களா, எதுவுமே நடக்காதது போல் இவன் சிரிப்பதை..." என்றாள்.

"அந்தப் பாப மூட்டை என் பார்வையிலேயே படவேண்டாம்," என்று கூறி மறுபக்கமாகத் திரும்பிப் படுத்துக் கொண்டான கணவன்.

"பாப மூட்டை" —அந்த சொற்கள் அவள் உள்ளத்தை ஈட்டிபோல் தைத்தன. என்ன பாபத்தைக் கண்டது அந்தச் சிசு? கள்ளமில்லா இல்லறத்திலிருந்து விளைந்த அந்த இன்னமுதை பாபச் சுமையென்று கூற அவர் உள்ளம் எப்படி ஒருப்பட்டது என்பதை அவளால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. பத்து மாதங்கள் படாதபாடுபட்டு, தாங்க முடியாத வேதனைகளைத் தாங்கி, அவள் பெற்றெடுத்த தங்கச் சிலையை, அவளுக்கும் அந்தக் குழந்தைக்கும் சம்பந்தமில்லாத ஒரு 'குற்றம்' நிகழ்ந்துவிட்ட காரணத்திற்காக, பாப மூட்டை என எப்படி அவள் புறக்கணிப்பாள்? அவர்தான் எப்படி அந்த அருஞ் செல்வத்தைப் பாபப் பிண்டமாகக் கருதினார்?

அவள் 'கோ'வென்று அழுதாள். குழந்தையோ விஷயம் புரியாமல் மீண்டும் சிரித்தது!

ஆனால் அவனோ, நீங்காக் களங்கம் தன் பரம்பரையின் மீது ஏற்பட்டு விட்டதையெண்ணி, அதற்குக் கழுவாய் தேட சோமநாதரின் திருநாமத்தை மூச்சு விடாமல் ஜபிக்க ஆரம்பித்தான்.

அன்று பகல் முழுவதும் புவனேஸ்வரியின் உள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது. காலையில் தகாதவர்கள் முகத்தில் ஒருவேளை விழித்தோமோ என எண்ணினாள். ஆனால் வழக்கம்போல் தூங்கி விழித்தவுடன் கணவனுடைய முகத்தைத்தான் அன்றும் தரிசனம் செய்திருந்தாள்!

அதன் பிறகு கணவனைக் குளுப்பாட்டி, உடையணிவித்து, உணவளித்து, உறங்க வைத்தாள். குழந்தையைப் பார்க்கும்போதெல்லாம் அவன் எரிந்து விழுந்தான். அது அவளுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அவன் கண்களில் படாமல் தொட்டிலை மாற்றிக் கட்டினாள். அவளும் அவனும் ஒரு வார்த்தை கூடப் பேசிக் கொள்ளவில்லை. வீட்டு வேலைகளை யந்திரம் போல் கவனித்தாள்.

ஒருவாறு பகல்பொழுது மெதுவாகக் கழிந்தது. இரவு படுக்கையில் படுத்தாள். தூக்கம் அவளுடைய இமைகளைத் தீண்டவும் மறுத்தது. அன்றைய நிகழ்ச்சிகள் அவளுடைய மன அரங்கில் சதிராடத் தொடங்கின.

முகம்மதியர்கள் கொடியவர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறாள் அவள். அப்படியானால் அந்தக் கொடிய இனத்தைச் சேர்ந்தவன், அவள் இந்து என்பதை அறிந்திருந்தும் அவளுடைய குழந்தையைக் காப்பாற்றியது ஏன்? அடிப்படையில் இரக்கம் என்கிற பண்பு அவனுடைய உள்ளத்தில் இல்லாதிருந்தால் அவளுடைய குழந்தையை அவன் ஏன் காப்பாற்றி இருக்க வேண்டும்? அதுதான் போகட்டும்; தனிமையில் இருந்த அவளிடம் அவன் எவ்வளவு கண்ணியமாக நடந்து கொண்டான்! எவ்வளவு அன்பொழுகப் பேசினான்! அவள்தானே, அவன் முகம்மதியன் என்பதற்காகச் சற்று கடுமையாகக்கூட நடந்து கொண்டாள்!

ஆனால் அவளுடைய கணவரோ! அதை நினைத்த மாத்திரத்திலேயே அவளுடைய கண்கள் குளமாயின. காப்பாற்றியவனுக்கு நன்றி தெரிவிக்காவிட்டாலும், காப்பாற்றப்பட்ட தன்னுடைய குழந்தையையே அல்லவா பாபமூட்டை—பழிச்சுமை என்றெல்லாம் எண்ணுகிறார்; ஏசுகிறார்!

பெற்ற குழந்தையைக் காரணமின்றி வெறுக்கும் கணவனையும், பிறர் குழந்தையைத் தன் குழந்தைபோல் பாவித்துக் காப்பாற்றிய முகம்மதிய வீரனையும் ஒப்பிட்டுப் பார்த்தாள்!

காலையில் முரடனாகக் காட்சியளித்த முகம்மதிய வீரன், இப்பொழுது இனியவனாகத் தோன்றினான்; அவனுடைய முரட்டுப் பார்வை கனிந்த பார்வையாயிற்று! அவ லட்சணமான தாடி மீசை முகம் அருள் பொழியும் வதனமாயிற்று... நிகழ்ச்சிகள் புதிய விளக்கமுற மெதுவாகக் கண்ணயர்ந்தாள் புவனா.

திடீரென்று தொட்டிலில் உள்ள குழந்தை வீறிட்டு அலறுகிறது. அவள் எழுந்து பார்க்கிறாள். என்ன பயங்கரம்! அவளுடைய கணவர் குழந்தையின் கழுத்தை நெறித்து அதைக் கொல்ல முயற்சி செய்துகொண்டிருக்கிறார். அவள் 'ஓ'வென்று கதறி குழந்தையைக் காப்பாற்ற முன்னால் ஓடுகிறாள். அவள் கணவர் அவளை எட்டி உதைத்துத் தள்ளுகிறார். அவள் அப்படியே மரம்போல் சாய்கிறாள். குழந்தை மூச்சுத் திணறுகிறது. அவள் செய்வதறியாமல் விழிக்கிறாள். திடீரென்று ஒரு வீரன் பாய்ந்து வந்து குழந்தையை அவள் கணவனிடமிருந்து பிடுங்கி அவளிடம் சேர்க்கிறான். அவள் அழுகை நீங்கி, நன்றியுணர்ச்சியோடு குழந்தையை அந்த வீரனிடமிருந்து வாங்கப் போகிறாள். குழந்தையைப் பெற்றுக் கொண்டவுடன் அந்த வீரனுடைய மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுகிறாள். அவன் அவளுடைய தலைமயிரை அன்போடு கோதுகிறான்... தலைநிமிர்ந்து பார்க்கிறாள்... அப்பொழுதுதான் அந்த வீரன் காலையில் வந்த முகம்மதிய வீரன் என்பதை உணர்ந்து திடுக்கிடுகிறாள்... ஐயோ!

"என்ன புவனா? கனவு ஏதாகிலும் கண்டாயா?"

கண்ணைக் கசக்கிப் பார்த்தாள். ஆம்; வெறும் கனவுதான் அவள் கண்டது என்பதை ருசுப்படுத்துவதுபோல், சோமநாதர் ஆலயத்தின் மணியோசை 'டாண், டாண்' என்று ஒலித்துக்கொண்டிருந்தது!

(தொடரும்)

'மறை மலை'

"இனி எந்த நாட்டு மொழியும் இந்த நாட்டில் படையெடுக்க முடியாது; தமிழ்தான் தமிழ்நாட்டிற்குரிய மொழி; தமிழ்நாட்டில் மட்டுமல்ல—பாரத நாட்டுக்கும் பொது மொழியாக இருக்கக்கூடிய தன்மையும் தொன்மையும் படைத்தது தமிழ்மொழி ஒன்றுதான்.

இதை நாம் மட்டும் சொல்லவில்லை. பாரதியாரே, 'சேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் தழைக்கச் செய்வோம், என்று கூறியிருக்கிறார்.

நமக்கு இன்று நல்ல காலம் வந்துவிட்டது. இங்கு பல கட்சிக்காரர்களும் ஒருங்கே கூடியிருக்கின்றனர். வேற்றுமைகளை யெல்லாம மறக்கச் செய்து அனைவரையும் ஒன்று கூட்டுவிக்கும் ஆற்றல் தமிழ்மொழி ஒன்றிற்குத்தான் உண்டு.

வடநாட்டு வாடையைத் தடுத்து நின்றவர் நம் மறைமலையடிகள். அந்த வடநாட்டு வாடை தமிழ்நாட்டில் புக முடியா வண்ணம், வேங்கட மலை தடுத்தது; தணிகை மலை தடுத்தது. அவற்றையும் கடந்து உள்ளே நுழைந்த வாடையை மறைமலை' தடுத்தது.

வடக்கிலிருந்து வருகின்ற வாடையை வந்தவழி ஓட்டுதல் வேண்டும். அதற்குத் தமிழர்கள் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

வேதாசலம் என்ற வடமொழிப் பெயரை, 'மறைமலையடிகள்' என்று மாற்றிக்கொண்டதைக் கண்டு பலர் உடலெரிவும், உள்ள எரிவுங் கொண்டனர். பழந்தமிழ்ப் பெயரான 'முதுகுன்றம்' என்பதை, 'விருத்தாசலம்' என்று மாற்றினார்கள்; 'முடமூக்கு' என்னும் அழகிய பெயரை, 'கும்பகோணம்' என்று மாற்றி அதற்குரிய குணங்களையும் கற்பித்தார்கள்; 'மறைக்காடு' என்பதை 'வேதாரண்யம்' என்றாக்கினார்கள். இப்படிப்பட்ட அருந்தமிழ்ப் பெயர்களையெல்லாம் மாற்றியது கண்டு ஆத்திரப்படாதவர்கள், 'வேதாசலம்' என்ற வடமொழிப் பெயரை 'மறைமலை' என்று மாற்றியது கண்டு உள்ளெரிவும் உடலெரிவும், கொள்வானேன்?

நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்—இனி இந்நாட்டிலே பிறக்கின்ற பிள்ளைகளுக்கெல்லாம் நல்ல தமிழ்ப் பெயர்களையே வையுங்கள், நல்ல தமிழ் வேண்டுமென்றால் மறைமலையடிகளின் நூல்களைப்படியுங்கள்;

'மறைமலையடிகளார் வாழ்ந்த இடத்துக்குப் 'பல்லவபுரம்' என்று பெயர்' அது நாளடைவில், 'பல்லாவரம்' என மருவிவிட்டது. அந்தப் பல்லவபுரத்திலே அடிகளாரின் பெயரால் ஓர் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தப் போவதாக அறிவித்துள்ளார்கள். அந்த இடத்திலே வெறும் தமிழ்க் கல்லூரி மட்டும் ஏற்படுத்துவது போதாது; ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகமே தோற்றுவிக்க வேண்டும் என்பது என் பேரவா."

—மறைமலையடிகளார் 7-வது நினைவு நாள் விழாவில் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை.

ஓட்டப் பந்தயம்!

"செங்குன்றத்தில் 'என். சி. சி.' படையினர் அடுத்த வாரம் முகாமிட வேண்டும்—அங்கேயே வருடாந்திர விளையாட்டுப் பந்தயங்களும் நடக்க இருக்கின்றன!"

—இந்த அறிக்கையைப் பள்ளி செய்திப் பலகையில் கண்டதும் கண்ணன் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். நண்பர்கள் புடைசூழ நகரத்தின் எல்லையைத் தாண்டி எந்தத் திசையிலாவது ஒரு அடி எடுத்து வைப்பதைக்கூட அவன் மகத்தான—மகோன்னத—பெரிய—அரிய சாதனையாக எண்ணிக் கொள்பவன். ஏனெனில் பள்ளி விட்டால் வீடு; வீட்டை விட்டு வெளியேறினால் பள்ளி—இந்த அன்றாடக் கடன்களிலிருந்து ஒரு சிறிது தவறவும் அனுமதிக்காது, அவனுடைய 'வீட்டுச் சட்டம்'! அப்பாவின் அலையும் விழிகளும், அம்மாவின் ஓரிடத்தில் உட்காராத் தன்மையும் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் அணுவளவும் பிசகாது. பக்கத்து வீட்டு நண்பனைப் பார்க்கச் செல்வதென்றால்கூட எண்ணற்ற மனுக்கள் சமர்ப்பித்து, அத்தனையும் நிராகரிக்கப்பட்ட பின், கடைசியில் கண்ணீரைக் 'கான'முடன் பிரயோகித்து, அப்பாவின் கருணையைச் சம்பாதிக்க வேண்டுமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! ஊரையெல்லாம் ஒருங்கே திரள வைத்த 'சர்க்கசை'ப் பார்க்கச் செல்வதற்குக்கூட ஒரு வார சாத்வீக சத்யாக்கிரகம்' அல்லவா தேவைப்பட்டது, கண்ணனுக்கு!

அத்தகைய சிறை வாழ்வு நடத்தும் கண்ணன் தடையேதுமின்றி வேற்றிடம் செல்லக் கிடைத்திருக்கும் இந்த அருமையான வாய்ப்பை சிரித்துக் களித்து வரவேற்றதில் வியப்பென்ன இருக்க முடியும்?

மேலும் விளையாட்டு என்றால் கண்ணனைப் பிடிக்கவேமுடியாது! மகிழ்ச்சியின் காரணத்தால் மட்டுமல்ல; விளையாட்டுகளின் வெற்றிகளிலிருந்தும் அவனை எந்த சக்தியும் பிடித்து நிறுத்த முடியாது! 'அசகாய சூரன்'—இந்தப் பட்டப் பெயர்கூட அவனுக்குப் பள்ளியிலே உண்டு! கால் பந்தாட்டத்தில் 'கோலி'ல் நின்று விட்டால் போதும்; எறும்புப் புற்றில் எலி கூடப் புகுந்து விடும்; ஆனால் கண்ணனைத் தாண்டிச் சென்று 'கோல்' அடைய எந்தப் பந்தும் சிறிது தயங்கத்தான் செய்யும்! தாவிப் பறந்து பந்தை அடித்து அவன் 'பாட்மிண்டன்' விளையாடும்போது பார்ப்பவர்களுக்கே தனி உணர்ச்சியும் உற்சாகமும் ஏற்படும். சடுகுடு, ஓட்டப்பந்தயம், இன்னும் விளையாட்டு வரம்பை மீறி அப்போதைக்கப்போது எழும்பும் கைச்சண்டை—அனைத்திலும் அவன் 'புலி'தான்; அதோடுமட்டுமல்ல; வாய்ச் சண்டை என்று வந்தாலும் எந்த வம்பனும் அந்த 'வாயாடி'யிடமிருந்து மீண்டு வெளி வருவது அபூர்வம்—ஆச்சரியம்!

அத்தகைய கண்ணனைத்தான் விளையாட்டும், வெளியிடப் பிரயாணமும் 'வருக, வருக!' என்று இரு கைகூப்பி வரவேற்கிறதென்றால்...அவன் எத்தனை புளகாங்கிதமடைந்திருப்பான்!

'கால் வருடப் பரிட்சை'க்குப் படித்த களைப்பெல்லாம் போன இடமே தெரியவில்லை. செய்திப் பலகையிலிருந்த கண்களை மிகவும் சிரமப்பட்டு இழுத்து, எங்கேயோ "தேவா, தேவா!" என்று அழைத்துக்கொண்டே ஓடினான் கண்ணன்.

கண்களுக்குத் தெரியாத எந்த 'இந்திரலோக'த்துத் தேவனையும் அவன் அழைக்கவில்லை. அழைத்தாலும், அன்பொழுக வரவேற்றாலும் அந்த 'இலாதவர்களின் வருகை' கிடைக்காது என்பதும் அவனுக்குத் தெரியும். ஏனெனில், கண்ணன் எதையும் இலகுவில் நம்பிவிட மாட்டான். நெஞ்சகத் தராசிலே நன்கு எடை போட்ட பிறகுதான்—மனதிலே நன்கு உரைத்துப் பார்த்த அப்புறம் தான்—நண்பர்களைக்கூட அவன் நம்பத் துணிவான். அதனால் அவனுக்கு 'இரும்பு இதயக்காரன்' என்ற பெயரைக்கூட பள்ளியிலே சிலர் சூட்டி அழகு பார்த்துக் கொண்டார்கள்.

ஆகவே கண்ணனின் "தேவா" என்ற குரலைக் கேட்டு இந்திர விமானத்தில் யாரும் பறந்து வரவில்லை. பள்ளி மைதானத்திலே இருந்த ஆலமரத்தடியிலே, விரித்த புத்தகமும் கையுமாக உட்கார்ந்திருந்த சிறுவன் ஒருவன்தான் "ஏண்டா இப்படிக் கத்திக்கிட்டு ஓடி வருகிறாய்?" என்று தலை நிமிர்த்திக் கேட்டான்.

"கத்துறத்துக்கு நான் ஒன்றும் காகிதம் புசிக்கும் பிராணியில்லை! சொல்லவந்த சுவையான செய்தியைத்தான்கேளேன்! நாமெல்லாம் அடுத்த வாரம் என். சி. சி. 'கேம்ப்' போகப் போகிறோம்; தெரியுமா?..." என்றான் கண்ணன் மகிழ்ச்சியோடு!

"தெரியுமே! விளையாட்டுப் போட்டிகள்கூட வைத்துவிட்டார்களாமே!..." என்றான் அந்தத் 'தேவன்'. ஆனால் அவனது பதிலிலே கேள்வி எழுப்பியவனின் குரலிலே 'பளிச்'சிட்ட மகிழ்ச்சியின் சாயலைக்கூடக் காணவில்லை. ஏன்? அவன் இந்தப் பூரிப்பான செய்தியை இவ்வளவு அசட்டையாக வரவேற்பதின் பொருள்தான் என்ன?

"தேவா! எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது தெரியுமா? என் நண்பன் விமலனைத் தெரியுமல்லவா உனக்கு; அவனிடமிருந்து 'கேமரா'வைக்கூட வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன். ஒரு வாரத்தையும் உல்லாசமாகக் கழிப்போம்!..."

கண்ணன் பேசிக்கொண்டே போக, இடைமறித்த தேவன் "முடிந்ததாப்பா?" என்றான்.

"எப்படி முடியும்? இனிமேல் தானே நல்ல செய்தி! 'காம்ப்'பில் நடைபெறுகிற விளையாட்டுப் போட்டிகள் அத்தனையிலும் நானே வெற்றி மாலை சூடி, 'சாம்பியன்ஷிப் கப்'பையும் தட்டிக் கொண்டுவந்து விடுகிறேன்! நீ பார்த்துக்கொண்டே இரேன்; எல்லா பையன்களும் மூக்கில் விரலை வைக்கப் போகிறார்கள்!"—என்றான் கண்ணன், இடையிடையே சிரித்துக் கொண்டு!

"இந்த முறை ஓட்டப் பந்தயம் தான் வைக்கப் போகிறார்களாம். ஓரே ஆட்டம் போடுகிறாயே; அது தெரியுமா உனக்கு?" என்றான் தேவன்!

"இருக்கட்டுமே! ஒன்றானால் என்ன; அந்த ஒன்றிலும் வென்று வருவேன் என்றுதானே நான் சொல்கிறேன்!"—என்றான் கண்ணன், வெற்றி வீரனைப்போல!

"கண்ணா! உனக்குத் தெரியுமா; நான்கூட நன்றாக ஓடுவேன் என்று!" என்றான் தேவன் மெதுவாக!

"சபாஷ்! அப்படிச் சொல்லு! போட்டி நம்ப ரெண்டு பேருக்குமே இருக்கட்டுமே! என்ன; 'கப்' யாருக்குக் கிடைக்குதுன்னு பார்ப்போமா?" — கண்ணன் இப்போது மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்று விட்டான். அவன், இதை உண்மையாகத் தான் சொன்னான்.

நண்பர்களுக்கிடையே போட்டி வருவதில்லையா? அதுவும் இது என்ன அப்படி தலைபோகிற காரியமா? விளையாட்டுதானே; அதிலே போட்டியும் ஒரு விளையாட்டுக்கு தானே! மனதிலே எந்த விதக் களங்கமும் இல்லாமல்தான் சொன்னான் கண்ணன்.

ஆனால் தேவன்......? கண்ணனின் சொற்களுக்குள்ளே 'என்னவோ' மறைந்து கிடப்பதாக அவன் கருதினான். அது, 'தோற்றோடப் போகிறாயே' என்ற கேலியா—அல்லது, 'என்னை வென்றிட உன்னால் முடியுமா?' என்ற சவாலா—அல்லது, 'அட பைத்தியமே! மூக்கறுபட்டு முகம் கவிழ்க்கப்போகிறாய் நீ' என்ற ஏளனமா—என்று அவனால் கண்டு பிடிக்கவே முடியவில்லை. ஆனால், அவனது ஆத்திரக்கார நெஞ்சத்திலே அந்தக் கணத்திலே திடீரென்று ஒளித்து மறையும் மின்னலைப்போல் 'விஷவித்து' ஒன்று தோன்றியதோடு மட்டுமல்ல; ஆழப் பதிந்தும் விட்டது!

"கண்ணன் நேற்றுவரை என் நண்பன். இன்றோ—என்னோடு போட்டியிட்டு, ஓட்டப் பந்தயத்திலே வெற்றியைப் பறித்துச் செல்ல வேண்டுமென்று திட்டமிட்டு விட்டான். இனி அவன் என் நண்பனாக இருக்க முடியுமா? அவன் இன்றுமுதல் என் 'முதல் விரோதி'யல்லவா? கண்காணித்து கவிழ்க்கப்பட வேண்டிய பயங்கர உருவமல்லவா?"

—இந்தத் தீய எண்ணம் நண்பனாகிய தேவனின் உள்ளத்திலே அசைக்க முடியாத இடத்தைப் பற்றி விட்டது என்பதை அன்பு நண்பன் கண்ணன் எப்படி அறிவான்? தேவனின் தோளிலே கை போட்டுக் கொண்டு "வாடா போகலாம் வீட்டுக்கு! அப்பா 'பஸ் ஸ்டாண்டி'ற்கு ஆள் அனுப்பி விடுவார், எங்கே அருமந்தச் செல்வனைக் காணோமே என்று!...உம் புறப்படு...!" என்றான்.

"நான் ஒன்றும் உன்னைப்போல் 'பயந்தாங்கொள்ளி' இல்லை:.....நீ போ! நான் மெதுவாகத்தான் வருவேன்! மேலும், நான் மைதானத்திலே ஓடிப் பழகப் போகிறேன்! நாள் நெருங்கி விட்டதல்லவா, பந்தயத்துக்கு?..."என்று கடுகடுப்புடன் கூறினான் தேவன்!

"அப்படியா? பார்ப்போமே ஒரு கை; என் பந்தயத்துச் சிங்கமே!" என்று கிண்டலுடன் கூறிக்கொண்டு புறப்பட்டு விட்டான் கண்ணன்..

"பார்ப்போமே, ஒருகை!"-கூரிய ஈட்டிபோல் தேவனின் உள்ளத்தில் தைத்தன இந்தச் சொற்கள்! அவன் கீழ் உதட்டை மடித்துக் கடித்து ஆத்திரமான பெருமூச்சு ஒன்றை வெளிவிட்டான்!

அப்பப்பா!...அந்த விஷமூச்சு தான் எவ்வளவு வேதனையான உண்மைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது?

படிப்பில்—பழகும் பண்பில்—இணைபிரியாதிருந்த அந்த இரு அன்பு நண்பர்களிடையே பயங்கரமான பிளவை உண்டாக்கி விட்டது!

அது மட்டுமல்ல; தேவனின் உள்ளத்திலே எப்படியும் கண்ணனைத் தோற்கடித்துவிட வேண்டும் என்கிற பொறாமையைப் புகுத்தி விட்டது!

அது மட்டுமல்ல; பள்ளியிலிருந்து வீட்டிற்கும், வீட்டிலிருந்து பள்ளிக்கும் தனியாகச் சென்றறியாத கண்ணன்-அதோ, தனது 'உடலில் பாதி' என்று கருதியிருந்த தேவனைப் பிரிந்து, அமைதி குலைந்த உள்ளத்தோடு தனியே நடந்து செல்லுகிறானே; அந்த விபரீத நிலையையும் அதுதானே உண்டாக்கி விட்டது!

தேவன் கண்ணனை வென்று விட வேண்டுமென்று 'கங்கணம்' கட்டிக் கொண்டிருந்தான் என்றாலும், ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பயிலும் அந்தப் பள்ளியில் எந்த ஒரு மாணவனிடமும் "ஓட்டப் பந்தயத்தில் யார் வெற்றி பெறுவார்கள்?"என்று கேட்டால் இப்படித்தான் பதில் கிடைக்கும்:

"இது என்ன கேள்வி? நாம் இப்போதே முடிவு செய்து கொள்ள வேண்டியதுதானே! நம்ப கண்ணனுக்கும் தேவனுக்கும் எவ்வளவு இணைபிரியாத நட்பு உண்டோ-அதைவிட அதிக வலிமை கொண்டதாயிற்றே கண்ணனுக்கும் 'வெற்றி'க்கும் உள்ள நட்பு! குறித்து வைத்துக்கொள்: கண்ணனுக்குத்தான் வெற்றி! வெற்றி! வெற்றி!"

கண்ணனின் சார்பிலேயே குவியும் இந்தச் சிறப்புரைகள் தேவனின் காதுகளிலும் விழாமலில்லை. ஆனால் அந்தப் புகழ் மொழிகள் அவன் நெஞ்சிலே பாழ் எண்ணங்களையல்லவா வளர்த்துக்கொண்டு வருகின்றன!

★

"அப்பா! நாங்கள் நாளைக்கு என். சி. சி. 'காம்ப்'க்குப் போகிறோம் அப்பா...ஆமாம்; இது என்னப்பா மாத்திரை? இங்கேயே வைத்திருக்கிறீர்கள்!"-அப்பாவின் படுக்கைக்குப் பக்கத்திலே உட்காருவதற்காக வந்த தேவன் இப்படிக் கேட்டான்.

✻ 8-ம் பக்கம் பார்க்க

கே. வி. ரத்னசபாபதி; சூளைமேடு

(?) சென்னை நகரசபை வாயிலில் திரு காமராசரது சிலையை நிறுவப்போகிறார்களாமே; ஏன்?

காந்தியாரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டிருந்த பெரியார் இன்று அவரது சிலையை உடைக்கிறார்.

அதுபோலவே பெரியார் இப்போது காமராசரைக் கங்கை போல் தலையில் தூக்கிவைத்துக்கொண்டிருக்கிறார். நாளை அவர் உடைப்பதற்கு காமராசர் சிலை வேண்டுமல்லவா? அதற்காகத்தான் அவசர அவசரமாகச் சிலை நிறுவுகிறார்கள்!

ஆ. காமாட்சிசுந்தரம்; குடந்தை

(?) காங்கிரஸ் ஆட்சியை யாராலும் அசைக்க முடியாது-என்று மந்திரி பக்தவத்சலனார் பேசியிருக்கிறாரே?

ஆமாம்; ருஷ்ய நாட்டு ஜாரும், ஜெர்மன் நாட்டு இட்லரும், இட்டாலி நாட்டு முசோலினியும்கூட அப்படித்தான் நண்பரே கூறிக்கொண்டிருந்தார்கள்!

எஸ். கோபாலகிருட்டிணன்; மாயூரம்

(?) பண்டித நேருவுக்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ளத் தொடர்பு என்ன?

அரியலூர் விபத்திலே ஆட்பட்டு தமிழகத்து மக்கள் முகாரியாக அழுது புலம்பினால் பண்டிதர் வரமாட்டார்; ஆனால் கோகிலகான இசைவாணி மோகனம் பாடினால் மட்டும் வருவார்!

தமிழ் நாட்டிலே புயல் வீசினால் அவர் வரமாட்டார்; ஆனால் குற்றாலத்திலே 'சீசன்' இருந்தால் மட்டும் வருவார்!

—இதுதான் தோழரே பண்டிதருக்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பு!

கோமேதகவேல்; திருநெல்வேலி

(?) சிவகாசி மட்டும் வடநாட்டில் இருந்திருந்தால்?

பெனாரஸ் அல்லது வாரணாசி என்று அழைக்கப்படுகிற வடநாட்டுக் காசிக்கும் இல்லாத மகத்துவம் ஏற்பட்டிருக்கும். பட்டாசு வெடிகளைக் கையில் வைத்துக்கொண்டு 'கைத் தொழிலை ஆதரியுங்கள்' என்று அமைச்சர்கள் ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் செய்திருப்பார்கள்!

நீட்டோலை . . .

❋ 5-ம் பக்கத் தொடர்ச்சி

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றி மூத்தத் தமிழோடு மோதப் போகிறதா? எங்கள் மாதா மணிமேகலை புனைந்து, சிலம்பொலித்துக், குறள் என்னும் படைக்கலன் தாங்கிப் போர்க் கோலம் பூண்டு விட்டாள்! அவளோடு பொருது அழியப் போகிறதா வடநாட்டு இந்தி?

இந்தக் கேள்வி திருவண்ணாமலையில் பிறக்கும். பிறகு திக்கெட்டும் கேட்கும். பின்னர் தென்னகம் போர்க்களமாகும். அழிந்தால் தமிழும் நாங்களும் அழிவது என்ற முடிவோடு முரசு முழங்கும்.

இந்தி எதிர்ப்பு மாநாடு பேசிக் கூடிய அல்ல! ஆணவக்காரர்களுக்கு எச்சரிக்கை விடுக்க!

தமிழர்—தென்னவர் கூடுகின்றனர், திருவண்ணாமலையில்!

தாயகம் மீட்க, தமிழ் மொழி காக்கப் படை திரளுகிறது திருவண்ணாமலையில்! ஆபத்து வருகிறது என்பதை அறிவிக்கும் மலைவிளக்கு ஏற்றப்படுகிறது:

அதோ, திருவண்ணாமலை தீபம்! திராவிடத்தோரே! திராவிடத்தோரே! திரளுவீர் நாடு காக்க என அறிவிக்கும் தீபம்! வா, நீயும் நானும் தமிழர்களும் ஒளி பெறுவோம் திருவண்ணாமலையில்! வழி வகுப்போம்; தமிழ் வென்றிட! தாயகம் செழித்திட!

அன்புள்ள,

நண்டன்

வியாபாரம்

எமது லாபகரமான வெளியீடுகளை விற்பனை செய்ய நியூஸ் ஏஜண்டுகள், புத்தக வியாபாரிகள, ஷாப் வியாபாரிகள் தேவை. இலவச சாம்பிள் விலைகளுக்கு எழுதவும்.

முருகன் பேப்பர் ஸ்டோர்ஸ்

36—45 கீழ, ஆவணி மூலவீதி, மதுரை.

நானும், கலைவாணரும்(1)

"மணமகள்" படத்திலிருந்துதான் எனக்கும் கலைவாணருக்கும் நெருங்கிய பழக்கமேற்பட்டது. ஏழெட்டு ஆண்டு காலத்தில் அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட தொடர்பில் எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகளும்—உள்ளத்தைத் தொடுகின்ற சம்பவங்களும் நடந்ததுண்டு. அவருடைய கலை உள்ளத்திற்கும் அன்புக்கும் எடுத்துக் காட்டுகளாய் அமைந்தவைகளாகும் அவைகள்.

மணமகள் படப்பிடிப்பு நடந்துகொண்டிருக்கிற காலம். ஒருநாள் எனது காரை அவரது கம்பெனியைச் சேர்ந்த தோழர் செல்லமுத்து எடுத்துச் சென்றார். கார் அவர் கம்பெனிக்குப் போனபோது காரில் பெட்ரோல் தீர்ந்து விட்டது என டிரைவர் சொல்லவே, செல்லமுத்து, கம்பெனி மேனேஜரிடம் கருணாநிதி காருக்கு இரண்டு காலன் பெட்ரோலுக்குச் சீட்டு கொடுங்கள் —எனக் கேட்டிருக்கிறார்.

அந்த மேனேஜர் கம்பெனியில் மிகப் பொறுப்புடையவரும் நாணயமானவரும் என் நண்பரும் கூட! இன்றும் என்னிடம் அன்பு கொண்டவர்தான்! அவர், செல்லமுத்துவைக் கடிந்துரைத்து "என். எஸ். கே. கம்பெனிக்கு லாபமான காரியமில்லை, இது போல இனி கேட்காதே" எனக் கூறியிருக்கிறார். அதோடு செல்லமுத்து காருக்குப் பெட்ரோல் போட்டு அனுப்பிவிட்டார். மறுநாள் அந்த மேனேஜர், கலைவாணர் மணமகள் படப்பிடிப்பில் இருக்கும்போது அவரிடம் சென்று, முதல் நாள் நடந்த கார் பெட்ரோல் நிகழ்ச்சியைக் கூறியிருக்கிறார். கலைவாணர் அது கேட்டு மகிழ்ச்சி அடையவில்லை. மானேஜர் கம்பெனிக்கு அக்கரையோடு பாடுபடுவதையும் பாராட்டவில்லை. அடங்காத சினம் கொண்டார். உடனே படப் பிடிப்பை நிறுத்தினார். மணமகள் படத்தில் அவருக்குரிய ஆசிரியர் வேடத்துடனேயே என் வீட்டுக்கு வந்தார். நான் வீட்டில் இல்லை. தாயார் இருந்திருக்கிறார்கள். வேடத்தைக் கண்டு அம்மாவுக்கு யார் என்றே புரியவில்லை. கலைவாணர் அம்மாவிடம், ஒரு பெட்ரோல் பில் புத்தகத்தை நீட்டி, "இதை தம்பி வந்ததும் கொடுங்கள்! இதில் ஐநூறு காலன் பெட்ரோலுக்கு எல்லா சீட்டிலும் கையெழுத்துப் போட்டிருக்கிறேன். அவர் இஷ்டம்போல் பெட்ரோல் போட்டுக்கொள்ளலாம்" எனக் கொடுத்துவிட்டுப்போய் விட்டார்.

நான் வந்ததும் என் தாய் என்னிடம், "யாரோ ஒரு வாத்தியார் வந்தார். அவர் இதைக் கொடுத்தார்" எனக் கூறி அவர் கூறிய விபரமும் கூறினார்கள். புத்தகத்தைப் பார்த்தால் நாலு, ஐந்து என "காலன்கள்" எழுதி, கலைவாணரின் கையெழுத்துப் போடப்பட்டிருந்தது அதை நான் மறுபடியும் அவரிடம் திருப்பிக் கொடுத்து, மானேஜர்மீது அவருக்குள்ள கோபத்தை தணிக்கப் படாதபாடு பட்டேன்.

அப்படிப்பட்ட அன்புள்ளம் கொண்ட கலைமேதை—பண்பாளர்—இன்று நம்மிடையே இல்லை! இழந்து தவிக்கிறோம்!

—மு. கருணாநிதி

பிறைவானம்

❋ 7-ம் பக்கத் தொடர்ச்சி

தேவனின் அ[illegible] சாதாரணமாக வந்த '[illegible]' சுரம் திசைமாறி, அல்ல[illegible]பல தந்து, கடைசியில் 'சர்க்கார் பெரிய மருத்துவசாலை'க்கு அவரை அழைத்துச் சென்று, பத்து நாள் படுக்கையிலும் கிடத்தி, பிறகுதான் "தொலைந்தேன்" என்று அவரைவிட்டு ஓடியது.

"எந்த மாத்திரையைக் கேட்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே தேவனின் கையிலிருந்த சிறு 'பாட்டிலை' வாங்கிய தந்தை, "அடாடா! இதைத் தொடாதே! இது தூக்க மாத்திரை! எனக்குத்தான் இரவுத் தூக்கமே கெட்டுவிட்டதே என்பதற்காக டாக்டர் கொடுத்திருக்கிறார். இதில் ஒரு மாத்திரையைச் சாப்பிட்டாலே போதும்; அவ்வளவுதான்; மறுகணம் சோம்பேறித்தனமும் தூக்கமும் தானே வந்துவிடும்!" என்றார்.

"அப்படியா?" என்ற தேவனின் குரல் மிகவும் 'பொருள்' பொதிந்து அப்போது வெளிவந்தது!

★

செங்குன்றம் என். சி. சி. 'காம்ப்'பில் அன்று ஒரே கொண்டாட்டமாக இருந்தது. ஓட்டப் பந்தயம் நடைபெற்று—'கப்'பைப் பெறப் போகும் கண்ணனைச் சுற்றி ஒரு பட்டாளமே நின்று கொண்டிருந்தது. பந்தய நேரமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

"கண்ணா! காலையிலேயிருந்து ஒரு இடத்தில் உட்காரவில்லையே நீ! ஒரே களைப்பாக இருப்பாயே! வாயேன், கொஞ்சம் 'ஹார்லிக்ஸ்' சாப்பிட்டுவிட்டுப் போகலாம்!"

இந்தக் குரல் காதில் விழுந்ததும் கண்ணன் மகிழ்ச்சியால் பூரித்துப் போனான். ஏன் தெரியுமா? இத்தனை நாட்களாக ஏதோ பரம்பரை பகையாளி போல முகத்தை 'உம்' என்று தூக்கி வைத்துக் கொண்டிருந்த தேவனல்லவா இன்று அன்பும் ஆசையும் பொங்க அழைக்கிறான்?

(அடுத்த இதழில் முடியும்)

சொர்ணம்

திருவண்ணாமலை மாநாடு காரணமாக இவ்விதழ் 'முரசொலி' எட்டு பக்கங்களில் வருகிறது. அடுத்த இதழ் வழக்கம்போல் பனிரெண்டு பக்கங்களுடன் வெளிவரும்.

கலைவாணர் நினைவு மலர்

கலைவாணரது மூவண்ண உருவை முகப்பிலேந்தி; பக்கத்திற்கு பக்கம் பைந்தமிழ் நாட்டுப் பொதுவுடமையாம் என். எஸ் கே.யுடைய புகழ் பாடுகிறது இந்த அருமையான ஏடு! பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், தோழர்கள்—அரங்கண்ணல்; இளஞ்செழியன்; கி. ஆ. பெ. விசுவநாதம்; எஸ். வி. சகஸ்ரநாமம்; கவிஞர் சுரதா; நாடகப் பேராசிரியர் ப. சம்மந்த முதலியார்; டாக்டர் மு. வ; புலவர் அன்பு—கணபதி; பேராசிரியர் அ. முத்தையா; டி. என். சிவதாணு; பிரண்ட் ராமசாமி; கொத்தமங்கலம் சுப்பு; டாக்டர் தருமாம்பாள்; கே. சாரங்கபாணி; பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை; மா. கு. நெடுமாறன்; ஆறுமுகம் போன்றோரது கருத்துரைகள் கலைவாணரைப் படிப்போரது நெஞ்சத்தில் அழியாத சித்திரமாகத் தீட்டுகின்றன. கலைவாணர் பற்றிய இந்தக் கருவூலம் அவசியம் உங்கள் நூலகத்தில் இடம்பெற வேண்டும்.

விலை அணா 12

இது ஒரு 'போர்வாள்' வெளியீடு

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, தமிழ்நாடு, சென்னை—6